**கவனிக்க.-** *2023.06.16 ஆந் திகதிய 2337 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2338 - 2023 ජූනි මස 23 වැනි සිකුරාදා 2023.06.23

*2338 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | 520 | | |


**கவனிக்க.-** ஆயுர்வேதம் (திருத்தம்) சட்ட மூலம், 2023 யூன் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2023, யூலை மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, யூன் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


617 - B82468 - 5,403(2023/06)

# பதவிகள் - வெற்றிடம்

## மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

*மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் மாகாண விவசாயப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்*

மத்திய மாகாண விவசாய திணைக்களத்தில் வெற்றிடம் நிலவ இருக்கும் மாகாண விவசாயப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இலங்கை விவசாய சேவை தரம் I ஐச் சேர்ந்த தற்போது அரசாங்க சேவையில் மற்றும் மாகாண அரசாங்க சேவையில் பணிபுரியும் இலங்கை விவசாய சேவை தரம் I ஐச் சேர்ந்த (விவசாய அபிவிருத்திப் பிரிவுக்கு உட்பட்ட) உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தேவையான தகைமைகள் :**

I. இலங்கை விவசாய சேவை தரம் I ஐச் சேர்ந்த (விவசாய அபிவிருத்திப் பிரிவுக்கு உட்பட்ட) உத்தியோகத்தராக இருத்தல்.

II. தற்போது அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுவதால் வயது எல்லை ஏற்புடையதன்று.

III. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 01/ 2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல்.

**02. ஆட்சேர்ப்பு முறை :**
இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை விவசாய சேவை தரம் I ஐச் சேர்ந்த (விவசாய அபிவிருத்திப் பிரிவுக்கு உட்பட்ட) விண்ணப்பதாரர்களுள், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் பெறப்படும் புள்ளிகளின் திறமை வரிசையின் அடிப்படையில் இவ்வெற்றிடம் நிரப்பப்படும். (அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் திட்டம் www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

*குறிப்பு :* தகைமைகளை உறுதிப்படுத்தும் அனைத்து சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணபத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**03. விண்ணப்பிக்கும் முறை :**
முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2023.07.14 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடிய வகையில் திணைக்களத் தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரினூடாக (மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தராயின் தனது விண்ணப்பத்தை மாகாண அமைச்சுச் செயலாளர் மற்றும் பிரதான செயலாளர் ஆகியோரின் விதந்துரையுடன்) "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மத்திய மாகாண விவசாயப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்" எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் மற்றும் குறிப்பிட்ட மாதிரிக்கு புறம்பாகவும் பூரணமின்றியும் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள்

எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.
(மாதிரி விண்ணப்பப்படிவத்தை மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இவ் ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சார்ந்ததாகும்.

இதன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

குமுதினி எஸ். பிரேமசந்திர,
செயலாளர்,
மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்,
2023, யூன் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் இலங்கை விவசாய சேவை தரம் I இல் மாகாண விவசாயப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி : ................................................................................

2. I. தற்போது வகிக்கும் பதவி : ................................................................................
   II. சேவை மற்றும் தரம் : ................................................................................
   III. தற்போதைய சேவை நிலையமும் முகவரியும் : ................................................................................
   ................................................................................

3. சுய முகவரி : ................................................................................

4. பால் : ................................................................................

5. I. பிறந்த திகதி : .........................................
   II. 2023.07.14 ஆந் திகதியன்று வயது : .........................................

6. தேசிய அடையாள அட்டை இல. : .........................................

7. தொலைபேசி இலக்கம் : .........................................
   I. பிரத்தியேக : .........................................   II. தொழில்: .........................................

8. இலங்கை விவசாய சேவை தரம் I இற்கு பதவியுயர்வு பெற்ற திகதி : .........................................

9. இலங்கை விவசாய சேவை தரம் I இன் சேவைக்காலத்தில் பெற்றுக்கொண்ட சம்பளமற்ற லீவு தொடர்பான விபரங்கள்

| இலிருந்து | வரை | வருடங்கள் | மாதங்கள் | நாட்கள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

10. விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதிக்கு (2023.07.14) தரம் I இல் முனைப்பான சேவைக்காலம்
வருடங்கள் ............................. மாதங்கள் ............................. நாட்கள் .............................

11. அரசாங்க சேவையில் முதல் நியமனம் (2023.07.14) ஆந் திகதி வரையிலான சேவைக்கால விபரங்கள்

| வகித்த பதவி | உரித்தான சேவை | நிறுவம் | காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

12. விவசாயத் துறையில் காட்டியுள்ள "திறமைகள்" பற்றிய விபரங்கள்

i. வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடுகள்

(இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி வழங்கல் திட்டத்தின் B.i. பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு) நேர்முகப் பரீட்சை நடக்கும் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலத்தில் பெற்றுள்ள செயலாற்றுகை மட்டம் தொடர்பான விபரங்கள்
(பொருத்தமற்ற சொற்களை வெட்டிவிடவும்)

| ஆண்டு | பெற்றுள்ள செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 2018 | மிகவும் சிறந்தது/சராசரியிலும் கூடியது/திருப்திகரமானது |
| 2019 | மிகவும் சிறந்தது/சராசரியிலும் கூடியது/திருப்திகரமானது |
| 2020 | மிகவும் சிறந்தது/சராசரியிலும் கூடியது/திருப்திகரமானது |
| 2021 | மிகவும் சிறந்தது/சராசரியிலும் கூடியது/திருப்திகரமானது |
| 2022 | மிகவும் சிறந்தது/சராசரியிலும் கூடியது/திருப்திகரமானது |

ii.வெளியீடுகள்

(இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி வழங்கல் திட்டத்தின் B.ii. பந்தியில் (a), (b) என வகைப்படுத்தப்பட்டுள்ளன)

| வெளியீடுகள் | உரிய பிரிவு |
|---|---|
| | |

iii. பாராட்டுக்கள் மற்றும் விருதுகள்

(அ) பெற்றுள்ள பாராட்டுக்கள் (Commendations) தொடர்பான விபரங்கள்

(“பொது 230 ஆ” மாதிரிப்படிவத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாராட்டுக்களுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.)

| பெற்றுள்ள பாராட்டுக்கள் | பாராட்டு பெறப்பட்டது | | எந்த துறையில் செய்யப்பட்ட விடயம் காரணமாக இப்பாராட்டு பெறப்பட்டது |
|---|---|---|---|
| | யாரிடமிருந்து | வருடம் | |
| | | | |

(ஆ) பெற்றுள்ள விருதுகள் தொடர்பான விபரங்கள்

(இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள புள்ளி வழங்கள் திட்டத்தின் B.iii. பந்தியில் தரப்பட்டுள்ள அட்டவணையில் வகைப்படுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில் கீழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக.)

1. விவசாயத்துறைக்கு மேற்கொண்ட பங்களிப்புக்கான சர்வதேச விருதுகள் - ஆம்/இல்லை

| விருதின் பெயர் | விருது வழங்கப்பட்டது | | எந்த துறையில் செய்யப்பட்ட விடயம் காரணமாக இவ்விருது கிடைக்கப் பெற்றது |
|---|---|---|---|
| | யாரிடமிருந்து | வருடம் | |
| | | | |

2. விவசாயத்துறைக்கு மேற்கொண்ட பங்களிப்புக்கான தேசிய விருதுகள் - ஆம்/இல்லை

| விருதின் பெயர் | விருது வழங்கப்பட்டது | | எந்த துறையில் செய்யப்பட்ட விடயம் காரணமாக இவ்விருது கிடைக்கப் பெற்றது |
|---|---|---|---|
| | யாரிடமிருந்து | வருடம் | |
| | | | |

3. விவசாயத்துறைக்கு மேற்கொண்ட பங்களிப்புக்கான மாகாண மட்ட விசேட விருதுகள் - ஆம்/இல்லை

| விருதின் பெயர் | விருது வழங்கப்பட்டது | | எந்த துறையில் செய்யப்பட்ட விடயம் காரணமாக இவ்விருது கிடைக்கப் பெற்றது |
|---|---|---|---|
| | யாரிடமிருந்து | வருடம் | |
| | | | |

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துவதுடன், எனக்கெதிராக எவ்வித தற்போது ஒழுக்காற்று நடவடிக்கைகள் இல்லையெனவும், விண்ணப்பப்படிவம் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 05 வருட காலப்பகுதியில் தாபனக் கோவையின் தொகுதி II இன் அட்டவணை I அல்லது II இல் குறிப்பிட்டுள்ள தவறுகள், தண்டனைகளுக்கு ஆளாகவில்லையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி .................................

***திணைக்களத் தலைவரின் பரிந்துரை***

திரு./திருமதி. ......................................... ஆல் வழங்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள தகவல்கள் அவரது ஆள்சார்புக் கோவையுடன் பரீட்சிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டதுடன், அவர் 2023.07.14 ஆந் திகதிக்கு உடன் முந்திய 05 வருடத்தினுள் பெற வேண்டிய அனைத்து சம்பள ஏற்றங்களையும் ஈட்டியுள்ளார் எனவும், அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் ஏற்புகளுக்கமைய, இவ்வலுவலருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் எதிர் காலத்தில் அத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கவில்லை எனவும் சான்று பகர்கிறேன். இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க இணங்குகிறேன்.

................................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
பெயர் :
உத்தியோகபூர்வ முத்திரை

திகதி .................................

***அமைச்சின் செயலாளரின் பரிந்துரை***

உரிய விண்ணப்பப்படிவத்தினை நான் பரிந்துரைக்கின்றேன்/பரிந்துரைக்கவில்லை.

................................................................
அமைச்சுச் செயலாளரின் கையொப்பம்
பெயர் :
உத்தியோகபூர்வ முத்திரை

திகதி .................................

***மாகாண பிரதான செயலாளரின் பரிந்துரை : (மாகாண சபைக்கு உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு மாத்திரம்)***

உரிய விண்ணப்பப்படிவத்தினை நான் பரிந்துரைக்கின்றேன்/பரிந்துரைக்கவில்லை.

................................................................
மாகாண பிரதான செயலாளரின் கையொப்பம்
பெயர் :
உத்தியோகபூர்வ முத்திரை

திகதி .................................

*06 - 489*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.